ஏற்பட்டிருக்கலாம். முதலில் குறுகலாகப் பாதையை அமைத்து விட்டார்கள். அதை அகலப் படுத்துவதற்கும் பக்கச் சுவற்றைக் கட்டுவதற்கும் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவுறுத்தி விரைவான நடவடிக்கையை எடுக்கச் சொல்லலாம்.

(ஏ) சமயபுரம் அருகில் மாணிக்கபுரத்திற்கு இணைப்புப் பாலம்.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சமயபுரம் அருகேயுள்ள மாணிக்கபுரத்திற்கு இணைப்புப் பாலம் நீண்ட காலமாகக் கட்டப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியானது சமயபுரம் மாணிக்கபுரம் சாலையில் கி.மீ. 1/0ல் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டும் பணியாகும். இச்சாலை மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலையின் நீளம் 2.8 கி.மீ. ஆகும். இச்சாலை கி.மீ. 0/0-1/0 வரை செஞ்சரள் சாலையாகவும் கி.மீ. 1/0-2/8 வரை கற்சாலையாகவும் உள்ளது. இச்சாலையில் கி. மீ. 1/0ல் பெருவளை வாய்க்கால் குறுக்கிடுகின்றது. இந்த வாய்க்காலின் நீர் வழிப்பாதையின் அகலம் 12 மீட்டர்களாகும். இந்த இடத்தில் ஒரு உயர் மட்டப் பாலம் கட்டுவதற்கு உத்தேசமாக ரூ. 5.00 இலட்சங்கள் தேவைப்படும். பகுதி 2 திட்டத்தில் இனிவரும் காலங்களில் எடுத்துச் செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்ட பணித் தொகுப்புப் பட்டியலில் இப்பணியும் இடம் பெற்றுள்ளது.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையின் பகுதி 2-ல் தயாரிக்கப்படும் பணித் தொகுப்புப் பட்டியலில் இப்பணியைச் சேர்த்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காகப் புரட்சித் தலைவர் அரசுக்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1987 ஏப்ரல் 24] [திரு. செ. இரத்தினவேலு]

அடுத்தபடியாக அந்தக் கால்வாய் 5,000 பேரரைக் கொண்ட மாணிக்கபுரம் என்கிற கிராமத்தின் குறுக்கே ஓடுகிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள் ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்குச் செல்ல வேண்டுமெனறால் கிட்டத்தட்ட 10 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். தென் கரையில் உள்ளவர்கள் வடகரைக்குச் செல்ல வேண்டுமென்றால்— காரணம் அங்கேதான் சத்துணவு மையம், பள்ளிக்கூடம், ஆலயம் எல்லாம் இருக்கின்றன— இந்தக் கால் வாயைக் கடந்தாக வேண்டியிருக்கிறது. மேலும் குறிப்பாக சமயபுரத்துக்கு வரக்கூடிய வடபுறத்தில் இருக்கக்கூடிய கிராமங் களில் அதாவது புறத்தாக்குடி, இருங்காளூர், காந்தி நகர் போன்ற கிராமங்களில் உள்ள 10,000-க்கும் மேற்பட்ட ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இகதத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றித் தருவதற்கும், இந்த ஆண்டே இதை எடுத்துக் கொள்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை வழங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற பிரச்சனைகள் நியாயமானவைகளாக இருந்தாலும்கூட அரசு நிதிப் பிரச்சனையின் காரணமாக இந்தப் பணியை இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். பகுதி 2 திட்டத்தில் இந்தப் பணியைச் சேர்த்தாக வேண்டு மென்றுதான் இதற்கான திட்டங்களைத் தயார் செய்து, மதிப்பீடு களையும் முழுமையாகத் தயார் செய்து அதை ஒரு தொகுப்புப் பட்டியல் போன்று செய்கிறார்கள். அந்தப் பட்டியலில் இது சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே, வருகிற ஆண்டுகளில் பகுதி 2 திட்டத்தில் இதை எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் படுமே ஒழிய, இந்த ஆண்டே—அதுவும் எல்லா இடங்களையும் முடிவு செய்துவிட்ட இந்தச் சூழ்நிலையில்— இதை ஏற்றுக் கொள் வது என்பது அல்லது செயல்படுத்துவது என்பது கொஞ்சம் சிரமமானதாக இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இருக்கிற சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்தப் பட்டியலில் இருந்து எடுத்துச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

(ஐ) மாதவரம் பால்பண்ணைத் தொழிலாளர்கள் பணி நீக்கப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன். பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர் களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.